# முதலாம் தவணைப் பரீட்சை - 2017

## வரலாறு

| சுட்டெண் ........................ | தரம் :- 06 | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுபவர்
   (1) ஹெரடோரஸ் (2) ஈ.செ.கார்
   (3) ஸ்டுவட் பிக்கொட் (4) அரிஸ்ரோட்டில்

2) கி.பி. 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலங்கை வரலாற்றை அறிய உதவும் நூல்
   (1) மகாவம்சம் (2) தீபவம்சம்
   (3) பூஜாவலிய (4) போதிவம்சம்

3) சாலிவாகன சகாப்தம் என்ற நாட்காட்டியுடன் தொடர்புடைய மதம்
   (1) இந்து (2) கிறிஸ்தவம் (3) இஸ்லாம் (4) பௌத்தம்

4) பொலநறுவை கல் விகாரையுடன் தொடர்புடைய மன்னன்
   (1) 2ம் கஜபாகு (2) நிஸங்கமல்லமன்னன்
   (3) 1ம் பராக்கிரமபாகு (4) 1ம் விஜயபாகு

5) நெல்லை முதன்முதலில் பயிரிட்ட நாடு
   (1) சீனா (2) மெக்சிக்கோ (3) இலங்கை (4) இந்தியா

6) பாதங்கள் பலவற்றைக் கொண்ட மர அட்டை போன்ற உயிரினங்கள் தரையில் தோன்றிய யுகம்
   (1) பெலியொசொயிக் யுகம் (2) சிலூரியன் யுகம்
   (3) பெரும்பனியுகம் (4) கேப்பிரியன்யுகம்

7) நாம் வாழும் கோள்
   (1) புவி (2) புதன் (3) வியாழன் (4) வெள்ளி

8) ஒபபீனியாவின் பாறைப்படிவு கண்டுபிடிக்கப்பட்ட இடம்
   (1) பிரித்தானியா (2) இலங்கை (3) கனடா (4) ஜேர்மனி

9) தொல்பொருள் மூலாதாரங்களுள் ஒன்று
   (1) மகாவம்சம் (2) தீபவம்சம்
   (3) கல்வெட்டு (4) கர்ணபரம்பரைக் கதைகள்

10) மகாசேன மன்னனின் ஆட்சி ஆரம்பத்தை கிறிஸ்தவவருட புத்தவருட அடிப்படையில் கொண்ட சரியான விடைத்தொகுதி
   (1) கி.பி. 274 புத்தவருடம் 817 (2) கி.மு. 274 புத்தவருடம் 817
   (3) கி:பி. 1 புத்தவருடம் 1 (4) கி.மு. 1 புத்தவருடம் 1

11) கீழைத்தேசங்களின் தானியக்களஞ்சியம் என அழைக்கப்பட்ட நாடு
   (1) இந்தியா (2) சீனா (3) இலங்கை (4) இத்தாலி



kalvi.lk

12) உயிரினங்கள் முதலில் தோன்றியது

(1) நிலம் (2) ஆகாயம் (3) தரை (4) நீர்

13) மேமன் யானைகள் வாழ்ந்த யுகம்

(1) பெரும்பனியுகம் (2) சிலூரியன்யுகம்
(3) கொலோசின்யுகம் (4) பிளைத்தோசின்யுகம்

14) முதன்முதலில் நெருப்பைக் கண்டுபிடித்தமைக்கான சான்று கிடைத்துள்ள இடம்

(1) ஈராக் (2) ஈரான் (3) இஸ்ரேல் (4) சிரியா

15) களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள் கண்டெடுக்கப்பட்ட குகை

(1) பாசியன்கல (2) இஸ்ரேல் (3) இராவணன்எல்ல (4) இபன்கட்டுவ

16) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்

(1) பண்டுகாபயன் (2) வசபன் (3) தாதுசேனன் (4) மகாசேனன்

17) ஒஸ்ரலொயிட் இன மக்கள் வாழும் நாடு

(1) சீனா (2) ரஷ்யா (3) ஐக்கிய அமெரிக்கா (4) இந்தியா

18) மனிதனின் முக அமைவுகள் தோற்றங்கள் வேறுபடுவதற்கான பிரதான காரணம்

(1) பிறப்பு (2) சூழல் (3) பழக்கவழக்கங்கள் (4) கலாசாரம்

19) மத்தியதரைக் கடலில் பயிர்செய்யப்பட்ட தானியம்

(1) அரிசி (2) சோளம் (3) சாமை (4) கோதுமை

20) தற்போது வாழும் மனித இனம்

(1) ஹோமோசேபியன் (2) ஹோமோ இரக்ரஸ்
(3) ஹோமோ நியாண்டதால் (4) ஹோமோஹபிலஸ்

(20x2= 40 புள்ளிகள்)



kalvi.lk

பகுதி - II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்குவினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. A.

(i) வரலாறு பாடத்தில் முதலாந்தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் 2 தருக.

(ii) இக்கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகுகள் எவை?

(iii) நீர் மேற்கொண்ட கணிப்பீட்டின் மூலம் பெற்ற நன்மைகள் 2 தருக.

(2+2+2= புள்ளிகள்)

B. தரப்பட்ட இலங்கைப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் இடங்களை அறிந்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

(i) மாதோட்டம் ( )

(ii) கோகர்ண ( )


(iii) அநுராதபுரம் ( )

(iv) யாழ்ப்பாணம் ( )

(v) மகாகம ( )

(vi) மகாவலிகங்கை ( )

(6 புள்ளிகள்)






kalvi.lk

2.

(i) வரலாறு என்றால் என்ன?

(ii) வரலாற்றினைக் கற்பதற்குப் பயன்படுத்தப்படும் இரு மூலாதாரங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

(iii) வரலாற்றினைக் கற்பதன் மூலம் பெறும் பயன்கள் மூன்று தருக.

**(3x4=12 புள்ளிகள்)**

3.

(i) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்கள் இரண்டு தருக.

(ii) தொல்பொருள் மூலாதாரங்களில் அடங்கும் வியடங்கள் மூன்று தருக.

(iii) பின்வரும் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்வுகளை எழுதுக.

1. கி.பி. 1948 2. கி.பி. 67 3. கி.பி. 1 4. கி.பி. 544

**(3x4=12 புள்ளிகள்)**

4.

(i) மானிடப் பரினாமம் என்றால் என்ன?

(ii) உலகில் வாழும் ஹோமோ சேப்பியன் மனிதனின் நான்கு இனப்பிரிவுகளும் எவை?

(iii) விவசாயயுகம் தோற்றம் பெற்றதன் மூலம் மனிதன் பெற்றுக்கொண்ட நன்மைகள் மூன்று தருக.

**(3x4=12 புள்ளிகள்)**

5.

(i) மனிதனின் கலாசார வளர்ச்சியின் மூன்று கட்டங்களைக் குறிப்பிடுக.

(ii) இடைக்கால மனிதன் உணவாக எதனை உட்கொண்டான்?

(iii) மிருக வளர்ப்பினால் மனிதன் அடைந்த பயன்கள் 4 தருக.

**(3x4=12 புள்ளிகள்)**

6.

(i) A. பூமி தோன்றிய தூசிப்படலம் அழைக்கப்படும் பெயர் யாது?

B. ஒபபீனியா உயிரினம் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட நாடு

C. ஆற்றலுடைய மனிதன்

D. கீழைத்தேசங்களின் தானியக் களஞ:சியம் என அழைக்கப்பட்ட நாடு

(ii) மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தமையால் அடைந்த நன்மைகள் இரண்டு தருக.

(iii) புதிய கற்காலத்தில் நடைபெற்ற இரு முக்கிய நிகழ்வுகள் எவை?

**(3x4=12 புள்ளிகள்)**



kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page